மாண்புமிகு திரு. க. இராசாராம் : பிற்பட்டோர் பட்டியலில் வேளாளர் கவுண்டர் சமுதாயத்தையும் சேர்க்கவேண்டுமென்று சில விண்ணப்பங்கள் வந்தன. அவற்றைப் பரிசிலிக்கும்போது இப்போது நியமிக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பினர் ஆணைக் குழுவில் சில பரிந்துரைகள் செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகள்படி வேளாளர் சமுதாயத்தில் 60 சதவிகிதம் நிலச்சொந்தக்காரர்களாகவும், அவர்களின் ஆண்டு வருவாய் ஆயிரம் முதல் மூவாயிரம் ரூபாய் வரை உள்ளது என்றும், 30 சதவிகிதம் பயிரிடும் குத்தகைதாரர்கள் என்றும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 முதல் ரூ. 2,000 வரை உள்ளது என்றும், 10 சதவிகிதம்தான் வேளாண்மைத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்றும் ஆகவே இப்போது அவர்களை அந்தப் பட்டியலில் வைக்கத் தேவையில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். திரு. துரைசாமி அவர்கள் ஜாதி மத வேறுபாடு இல்லாத அரசாகும் இந்த அரசு என்று கேள்வியில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையில் இந்த பின்தங்கியோர் நல இலாகாகூட இன்னும் ஒரு பத்தாண்டுகள் வேலைசெய்து எல்லோரையும் ஒரே சமுதாயமாக்கப் பாடுபடுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Death of Engineer in Ennore Thermal Power Station

* 536 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether an Engineer in Ennore Thermal Power Station, died on 13th September 1969 during working hours; and

(*b*) if so, the reasons therefor and the action taken thereon?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) செக்கோஸ்லாவோகியா நாட்டைச் சேர்ந்த பொறியாளர் திரு. ஜோசப் பிராசக் எண்ணூர் அனல் மின்நிலையத்தில் முதுநிலை மேற்பார்வைப் பொறியாளராகப் பணியாற்றி வந்தார். அவர், குளிரூட்டு குழாயை பரிசோதனை செய்து கொண்டிருக்கையில், அருகே தற்காலிகமாக பொருத்தப்பட்டிருந்த 240 வோல்ட் மின்குமிழ் விளக்கின் உலோகத்திருகுவாணைப் (Metal Cap Holder) பிடித்தார். அதன்விளைவாக மின்சார அதிர்ச்சிக்கு உள்ளாகி, அதிர்ச்சியுற்ற வேகத்தில் தரைமீது விழுந்தார். அவர் விழுந்த போது அருகிலிருந்த பற்றவைப்புக்கருவிக்குரிய மின் மாற்றியின் கூரான மூலைப்பகுதியில் அவருடைய தலையின் பின்புறம் அடிப்பட்டது. அதன் விளைவாகத் தலையின் பின்புறத்தில் இரத்தக் காயம் ஏற்பட்டு, அப்பொறியாளர் மயக்கமுற்றார். அவர், மருத்துவ அதிகாரியிடம் விரைந்து கொண்டு செல்லப்பட்டு, அவருக்குச் செயற்கை முறையில் மூச்சுவிடுவதற்கான சிகிச்சையும், வேறு பிற மருத்துவ சிகிச்சைகளும் அளிக்கப்பட்டது. ஆனால் அவருக்கு நினைவு திரும்பவில்லை. உடனடியாக அவர் ஸ்டான்லி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அங்கு அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மின்சார அதிர்ச்சி தலையில் ஏற்பட்ட காயம் இவற்றின் ஒட்டுமொத்த விளைவால் அவர் இறந்தார்.

DR. H. V. HANDE : May I know that one of the main reasons for this particular accident was the manner in which certain equipments in the Ennore Thermal Scheme was kept and whether it was a fact that they were not properly kept in a proper

1971 டிசம்பர் 17]

manner and that there was some short-circuit as a result of which certain important cadgets and items in the Ennore Thermal Station got spoiled? May I know the loss sustained by the Government apart from the human loss?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, அங்கே கன்டென்சர் பொருத்தப்பட்டிருக்கிறது, மின்சார இணைப்பு வெளிச்சத்திற்கு. ஆனால் பெரும்பாலும், பாட்டரி விளக்குகளை வைத்துக்கொண்டே பரிசோதித்து வந்தார்கள். இவர் நிபுணர் என்பதால் இவர்கள் தானாகவே சோதனை செய்திருக்கிறார்கள். தவறி பக்கத்திலே இருந்த ட்ரான்ஸ்பார்மரின் கூரான பகுதி மண்டையில் அடித்து காயம் ஏற்பட்டு அதனால் பிற்பாடு இது ஏற்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, விசேஷமாக வந்திருந்த செக்கஸ்லோவேகிய நாட்டு எஞ்சினியர் காலமானதற்கு வருத்தம் தெரிவிக்கும் போது, அவருக்கு போதுமான சிகிச்சை அளிக்கப் பட்டதையும் தெரிவித்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, குறைபாடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தன மரங்களைக் கொண்டு தொழிற்சாலை

* 537 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள சந்தன மரங்களை அடிப்படையாகக்கொண்டு ஏதேனும் தொழிற்சாலை துவங்குகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) வட ஆற்காடு மாவட்டம் உட்பட நமது மாநிலத்தில் ஒரு ஆண்டில் கிடைக்கும் சுமார் 300 டன் சந்தன மரக்கட்டைகளைக் கொண்டு, பொதுத் துறையில், கோயம்புத்தூர் மாவட்டம், பவானிசாகரில் ஒரு சந்தன எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தலாமா என்பதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் கிடைக்கும் சந்தன மரத்திற்கு கோயம்புத்தூரில் தொழிற்சாலை அமைக்கப் போவதாகச் சொல்கிறார்கள். வடாற்காட்டிலேயே அமைக்க ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா? கோயம்புத்தூரில் அமைக்கவிருக்கும் திட்டத்தின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, முதலிலே எங்காவது ஆரம்பிக்க பரிசிலனை செய்யப்படுகிறது. முடிந்த பிறகு, எந்த இடம் என்பதைப்பற்றி முடிவு செய்யலாம்.